164

164

OFFICE OF THE REGISTRAR
9-OCT 1933
MADRAS

# THE PICTORIAL TAMIL GRAMMAR




**V. S. Venkataraman & Co.**

SHERS :: KUMBAKONAM.

TB
P31(b)
N33

# சித்திர முறை இலக்கணம்

இரண்டாம் புத்தகம்

ஆசிரியர் :
P. R. இராஜசூடாமணி
தமிழ்ப் பண்டிதர்
சென்னை

V. S. வெங்கடராமன் கம்பெனி,
பப்ளிஷர்ஸ் : . கும்பகோணம்.

பதிவு செய்தது] [விலை அணா 5




THE ROYAL PRINTING WORKS
MOUNT ROAD : : MADRAS.

# பொருளடக்கம்


| பாடம் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| | மொழி ... ... ... ... | 1 |
| I. | தமிழ் எழுத்துக்கள் ... ... | 2 |
| | உயிர் எழுத்து ... ... ... | 3 |
| | மெய் எழுத்து ... ... ... | 3 |
| | உயிர் மெய் எழுத்து ... ... ... | 3 |
| | ஆய்த எழுத்து ... ... ... | 6 |
| | குறிலும் நெடிலும் ... ... ... | 8 |
| | மெய் இனங்கள் ... ... ... | 11 |
| | சுட்டெழுத்துக்கள் ... ... ... | 14 |
| | வினவெழுத்துக்கள் ... ... ... | 17 |
| | தமிழ் எழுத்துக்களின் விளக்கம் ... ... | 21 |
| | வடமொழி எழுத்துக்கள்... ... ... | 22 |
| II. | சொல்லியல் ... ... ... | 23 |
| | சொல் ... ... ... | 23 |
| | I. பெயர்ச் சொல் ... ... ... | 24 |
| | அறுவகைப் பெயர்கள் ... ... | 24 |
| | 1. எண் ... ... ... | 27 |
| | 2. திணை ... ... ... | 28 |
| | 3. பால் ... ... ... | 30 |
| | 4. இடம் ... ... ... | 33 |
| | 5. வேற்றுமை ... ... ... | 34 |
| | சாரியை ... ... ... | 37 |
| | தன்மை முன்னிலைப் பெயர்கள் வேற்றுமை ஏற்றல் ... ... | 38 |

II. வினைச்சொல் ... ... ... 43

(1) காலம் ... ... ... 44

நிகழ்காலம் ... ... ... 45

இறந்தகாலம் ... ... ... 46

எதிர்காலம் ... ... ... 47

(2) பகுதி விகுதிகள் ... ... ... 48

(3) வினைமுற்று ... ... ... 48

I. தன்மை வினைமுற்று ... ... 49

II. முன்னிலை வினைமுற்று ... ... 49

III. படர்க்கை வினைமுற்று ... ... 49

IV. ஏவல் வினைமுற்று ... ... 50

V. வியங்கோள் வினைமுற்று ... ... 50

(4) எச்சம் ... ... ... 51

பெயரெச்சம் ... ... ... 51

வினையெச்சம் ... ... ... 52

(5) விகுதி ... ... ... 53

(6) உடன்பாடு, எதிர்மறை ... ... 55

III. இடைச்சொல் ... ... ... 57

IV. உரிச்சொல் ... ... ... 58

V. சந்தி ... ... ... 58

புணர்ச்சி ... ... ... 59

இயல்புப் புணர்ச்சி ... ... 59

விகாரப் புணர்ச்சி ... ... 60

VI. வாக்கியம் ... ... ... 62

எழுவாய் ... ... ... 62

பயனிலை ... ... ... 63

செயப்படுபொருள் ... ... 63

செயப்படுபொருள் குன்றிய வினை, குன்றாத வினை ... ... 64

# சித்திர முறை இலக்கணம்

## இரண்டாம் புத்தகம்

——— o ———

### மொழி

நாம் மனத்தில் நினைக்கும் கருத்துக்களை மொழியால் பிறர்க்கு உணர்த்துகிறோம். நாம் பிறந்தது முதல் பேசிவரும் மொழி தமிழ். தமிழே நமக்குத் தாய்மொழி. நமக்கு அதைப் பிழையில்லாமல் பேசவும் எழுதவும் கற்பிக்கும் நூல் தமிழ் இலக்கணம் எனப்படும்.

நான் ஒரு மாணுக்கனை நோக்கி, "இராச மாணிக்கம்!" என்று அழைக்க, அப்பெயருக்கு உடையவன் என்னைப் பார்க்கிறான். அதற்குக் காரணமென்ன? நான் ஏதோ ஒரு முறையில் என் நாக்கையும் வாயையும் தொண்டையையும் அசைத்துத் தொடராகப் பல தொனிகளை எழுப்பினேன். அத்தொனிகள் "இராச மாணிக்கம்" என்று ஒலித்தன. அந்த ஒலிகளைக் கேட்டவுடனே அதற்குரியவன் திரும்பிப் பார்த்தான். இப்படியே நான் 'இராச மாணிக்கம்' என்று காதில் விழும் ஒலியையெழுப்பும் பொழுதெல்லாம் அதற்குரிய சிறுவன் திரும்பிப் பார்ப்பான். இவ்வொலியில், இ, ரா, ச, மா, ணி, க், க, ம் என்றும் சிறு ஒலிகள் இருக்கின்றன. இவ்வொலிகள் ஒவ்வொன்றும் ஓர் எழுத்தாம்.

அவ்வெழுத்துக்களுக்கு ஒலிவடிவு என்றும் வரி வடிவு என்றும் இரண்டு வடிவங்கள் உண்டு. நாம் பேசும்போது ஒலிவடிவு எழுத்தை உபயோகிக்கிறோம். ஒலிவடிவத்தை கண்ணால் பார்த்து அறியும்படியான அடையாளமே வரி வடிவு எழுத்தாம்.

# 1. தமிழ் எழுத்துக்கள்

**அ** இது ஓர் எழுத்து. இந்த எழுத்துக்கு உயிர் உண்டு. இதை உச்சரிக்க முடியும். இது, தானே தனித்து உச்சரிக்கும். இதை மெய்யெழுத்தோடு சேர்த்தால், அதையும் உச்சரிக்கலாம். இது மெய்யெழுத்துக்கு உயிர் கொடுப்பதினாலும் உடம்பில் உள்ள உயிரைப்போல் இருப்பதினாலும் இது உயிர் எழுத்து எனப்படும். (உயிர்=ஜீவன்.)

**க்** இது ஓர் எழுத்து. இந்த எழுத்துக்கு உயிர் இல்லை. இந்த எழுத்தை உச்சரிக்க முடியாது. இது ஒரு உயிரற்ற பொருளைப் போலிருக்கிறது. இது உயிர் இல்லாத உடம்பைப்போலிருப்பதால் இது மெய்யெழுத்து எனப் பெயர் பெறும். (மெய்=உடம்பு).




தானாய் இயங்கும் திறனில்லாத இயந்திரம். விசை. இயங்கும் இயந்திரம்.

**க் + அ = க**

யந்திரத்திற்குள் விசைபுகுந்தால் இயங்கும் யந்திரமாய் ஓடும்.

மெய் எழுத்தில் உயிர் புகுந்தால் உயிர் மெய் எழுத்தாய் ஒலிக்கும்.

## உயிர் எழுத்து.

| அ | ஆ | இ | ஈ | உ | ஊ |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |

| எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 |

## மெய் எழுத்து.

| க் | ங் | ச் | ஞ் | ட் | ண் | த் | ந் | ப் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |

| ம் | ய் | ர் | ல் | வ் | ழ் | ள் | ற் | ன் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |

## உயிர் மெய் எழுத்து.

| | | |
|---|---|---|
| க் + அ = க | க் + உ = கு | க் + ஐ = கை |
| க் + ஆ = கா | க் + ஊ = கூ | க் + ஒ = கொ |
| க் + இ = கி | க் + எ = கெ | க் + ஓ = கோ |
| க் + ஈ = கீ | க் + ஏ = கே | க் + ஔ = கௌ |

| | 2 அ | ஆ | இ | ஈ | உ | ஊ |
|---|---|---|---|---|---|---|
| 1 க் | 3 க | கா | கி | கீ | கு | கூ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ |
| த் | த | தா | தி | தீ | து | தூ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ |

1. மெய்யெழுத்து. 2. உயிர் எழுத்து. 3. உயிர் மெய்யெழுத்து.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2 | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
| 3 | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| | னெ | னே | னை | னொ | னோ | னௌ |

2. உயிர் எழுத்து. 3. உயிர்மெய்யெழுத்து.

## ஃ ஆய்த எழுத்து.



வேலாயுதம்



அடுப்புக்கொம்மை

இந்தப் படங்களைப் பார். முதலில் இருப்பது வேலாயுதம்; வேலில் மூன்று கூர்கள் இருக்கின்றன. இரண்டாவது ஓர் அடுப்பு; அதில் மூன்று கொம்மைகள் இருப்பதைப் பார்.

வேலாயுதத்தின் கூர்களைப் போன்றுவது, அடுப்புக் கொம்மைகளைப் போன்றுவது மூன்று புள்ளிகளினால் எழுதப்படும் எழுத்துக்கு ஆய்தம் என்று பெயர். ஆய்தம் ஒரு சொல்லின் நடுவில்தான் வரும் :—

அஃது, இஃது, எஃது.

## சுருக்கம்

உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டும் மற்ற எழுத்துக்களின் உதவியில்லாமல் தாமாக ஒலிக்கும்.

உயிர் இல்லாத உடம்பு தனித்து நடவாதது போல, மெய் எழுத்துக்கள் பதினெட்டும் உயிர் எழுத்துக்களின் உதவியில்லாமல்தாமாய்உச்சரிக்கமாட்டா.மெய்எழுத்துக்களை வேறுவிதமாக உச்சரிக்க முடியாது. அதனாலே "இ" என்ற எழுத்தைக் கூட்டி, இக், இங், இச் என்று உச்சரிக்க வேண்டியதாயிருக்கிறது. ஆனால் அப்படி உச்சரிப்பது இலக்கண விதிப்படி சரியன்று.

க் முதல் ன் வரையிலுள்ள 18-மெய் யெழுத்துக்களோடு அ-முதல் ஒள வரையிலுமுள்ள 12உயிர் எழுத்துக்களையும் தனித்தனியே கூட்டுவதினால் உயிர்மெய்எழுத்துக்கள் வரும். அவை 18 × 12 = 216 எழுத்துக்களாம்.

ஆய்த எழுத்தின் வடிவம் மூன்று புள்ளியாம். ஃ ஆய்தம் ஒரு சொல்லின் முதலிலும், கடைசியிலும்வராது.

தமிழ் மொழியில் மொத்தம் எழுத்துக்கள் = 247.

பயிற்சி :—

(1) தமிழ்மொழியில் உள்ள எழுத்துக்கள் எத்தனை வகைப்படும்? உயிர் எழுத்துக்களை எண்ணிப் பார். அவை எத்தனை? அவை எவை? அவைகளை என் உயிர் எழுத்து என்று கூறவேண்டும்?

(2) மெய் எழுத்துக்களை எண்ணிப்பார். அவை எத்தனை? அவை எவை?

(3) உயிரும் மெய்யும் சேர்ந்த எழுத்துக்களை என் உயிர் மெய் என்கிறோம்? உயிர்மெய் எழுத்துக்கள் எத்தனை?

(4) ஆய்த எழுத்தாவது யாது? அது எங்கு வரும்?

(5) (a) அடியில் வரும் எழுத்துக்களை மெய், உயிராகப் பிரித்து எழுது :—

ச(= ச் + அ), ற, ழ, ள, ண, ஞ, ழு, டை, டோ, கௌ.

(b) அடியில் வரும் எழுத்துக்களைச் சேர்த்து உயிர் மெய் எழுத்தாக எழுது.

ண் + ஆ(= ணா), க் + ஈ, ட் + ஒள, ள் + இ, ர் + ஓ, ன் + ஐ, த் + உ, வ் + ஊ.

# குறிலும் நெடிலும்

கீழ் வரும் மொழிகளை உச்சரிக்கும் பொழுது முதலெழுத்துக்களின் ஓசைகளைக் கவனியுங்கள்.



அரசன்



ஆலமரம்



இரதம்



ஈ



உரல்



ஊதல்



எள்



ஏர்



ஐயர்



ஒட்டகம்



ஓடம்



ஔவை

நீங்கள் சில முதலெழுத்துக்களைக் குறுக்கியும் சில முதலெழுத்துக்களை நீட்டியும் உச்சரிக்கிறீர்களே. எவைகளைக் குறுக்கி உச்சரிக்கிறீர்கள் ?

| | | | | |
|---|---|---|---|---|
| அ | இ | உ | எ | ஒ |

என்னும் எழுத்துக்களைக் குறுக்கி உச்சரிக்கிறீர்கள். குறுகிய ஓசையை உடைய எழுத்துக்களுக்குக் குற்றெழுத்து அல்லது குறில் என்று பெயர்.

எவைகளை நீட்டி உச்சரிக்கிறீர்கள் ?

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆ | ஈ | ஊ | ஏ | ஐ | ஓ | ஔ |

நீண்ட ஓசையை உடைய எழுத்துக்களுக்கு நெட்டெழுத்து, அல்லது நெடில் என்று பெயர்.

பயிற்சி :—

1. கீழே காட்டியிருக்கும் எழுத்துக்களில் எவை குற்றெழுத்துக்கள், எவை நெட்டெழுத்துகள் ?

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ | ஆ | இ | ஈ | உ | ஊ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |

2. குற்றெழுத்துக்கள் எத்தனை ?

3. நெட்டெழுத்துக்கள் எத்தனை ?

4. உயிர் எழுத்துக்களைக் குறில், நெடில் என்று பிரிப்பது போலவே உயிர்மெய் எழுத்துக்களையும் குறில்களாகவும், நெடில்களாகவும் பிரிக்கலாம். கீழ் வரும் கட்டத்தில் காணும் ககர வரிசை

யில் குறிலுக்குப் பச்சை நிறமும், நெடிலுக்கு மஞ்சள் நிறமும் தடவிக்காட்டு.

| அ | ஆ | இ | ஈ | உ | ஊ |
|---|---|---|---|---|---|
| க | கா | கி | கீ | கு | கூ |

| எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|
| கெ | கே | கை | கொ | கோ | கௌ |

5. ககர வரிசையில் எத்தனை நெட்டெழுத்துக்கள்? எத்தனை குற்றெழுத்துக்கள்? அப்படியே ஙகர வரிசையில் எத்தனை நெட்டெழுத்துக்கள்? எத்தனை குற்றெழுத்துக்கள்?

6. உயிர் மெய் எழுத்துக்கள் 18 வரிசைகளில் ஒவ்வொரு வரிசையிலும் எத்தனை நெட்டெழுத்துக்கள் உள? எத்தனை குற்றெழுத்துக்கள் உள?

7. கணக்கிட்டு எழுதுக:—

குறில் உயிர் எழுத்துக்கள் =

குறில் உயிர் மெய்யெழுத்துக்கள் =

தமிழ் மொழியில் மொத்தம் குற்றெழுத்துக்கள் =

நெடில் உயிரெழுத்துக்கள் =

நெடில் உயிர் மெய்யெழுத்துக்கள் =

மொத்தம் நெட்டெழுத்துக்கள் =

## மெய் எழுத்து.

கீழே கொடுத்திருக்கும் மொழிகளை வாசித்துப் பார். இந்த மொழிகளை உச்சரிக்கும்பொழுது **பருத்த எழுத்துக்கள்** எப்படி ஒலிக்கின்றன என்று கவனி.

| | | | |
|---|---|---|---|
|  |  |  |  |
| க் | ங் | ச் | ஞ் |
| காக்கை | சங்கு | தச்சன் | மஞ்சள் |
|  |  |  |  |
| ட் | ண் | த் | ந் |
| தட்டு | கண் | தாத்தா | பந்து |
|  |  |  |  |
| ப் | ம் | ற் | ன் |
| பாப்பா | அம்மா | புற்று | மான் |

I. | க் | ச் | ட் | த் | ப் | ற் | என்னும்

ஆறு எழுத்துக்களையும் உச்சரிக்கும்பொழுது அவை மற்ற மெய் எழுத்துக்களைவிட வலிய ஓசை உடையவை என்று நாம் எளிதில் அறிந்து கொள்ளலாம். ஆகையால் அவை ஆறும் **வல்லெழுத்து** அல்லது **வல்லினம்** எனப்படும்.

II. | ங் | ஞ் | ண் | ந் | ம் | ன் | என்னும் ஆறு எழுத்துக்களையும் உச்சரிக்கும்பொழுது அவை மற்ற மெய் எழுத்துக்களைவிட மெலிந்த ஓசை உடையவை என்று நாம் எளிதில் உணர்ந்து கொள்ளலாம். ஆகையால் அவை ஆறும் மெல்லெழுத்து அல்லது மெல்லினம் எனப்படும்.

கீழ்வரும் சொற்களில் பருத்த எழுத்துக்களை உச்சரித்துப் பாருங்கள்.



ய்
பாய்




ர்
நார்



ல்
கால்



வ்
அவ்வை



ழ்
தாழ்



ள்
ஆள்

III. | ய் | ர் | ல் | வ் | ழ் | ள் | என்னும் ஆறு எழுத்துக்களும், வல்லினம் ஆறும் மெல்லினம் ஆறும் போக மிகுந்த ஆறு எழுத்துக்கள். இவை இடை எழுத்து அல்லது இடையினம் எனப்படும். ஏனென்றால், இவை வல்லினங்களைப்போல் அவ்வளவு வன்மையாகவும், மெல்லினங்களைப்போல் அவ்வளவு மென்மையாகவும் உச்சரிக்கப்படாமல் இடைத்தரமாய் உச்சரிக்கப்படுகின்றன.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| க் | ச் | ட் | த் | ப் | ற் | (6) | வல்லினம் |
| ய் | ர் | ல் | வ் | ழ் | ள் | | இடையினம் |
| ங் | ஞ் | ண் | ந் | ம் | ன் | | மெல்லினம் |

உயிர்மெய்யெழுத்துக்களில் மெய்யெழுத்துச் சேர்ந்திருப்பதால் அவைகளையும் இம்மூன்று இனங்களாகப் பிரிக்கலாம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| க | ச | ட | த | ப | ற | என வல்லினம் 6 |
| ங | ஞ | ண | ந | ம | ன | என மெல்லினம் 6 |
| ய | ர | ல | வ | ழ | ள | என இடையினம் 6 |

பயிற்சி :—

(i) வ், ட், ர், ற், ந், ன், ப், ம், என்பவை எந்த எந்த இனத்தைச் சேர்ந்தவை ?

(ii) கீழ்வரும் மொழிகளில் உள்ள மெய்களில் வல்லெழுத்து மெல்லெழுத்து இடையெழுத்துக்கள் எவை ?

(1) கண்ணுக்கு முன்னிருப்பது எங்கும் பரந்த ஆகாயம்.
(2) சூரியன் மற்றக் கிரகங்களுக்கெல்லாம் பிதாவாய் இருக்கிறது.
(3) கள்ளம் இல்லா மனத்தார்.

(iii) வல்லின உயிர் மெய் எழுத்துக்கள் எத்தனை ?

# சுட்டெழுத்துக்கள்




மேலே இருக்கும் படத்தைப் பார். ஒவ்வொரு கையிலும்இருக்கிற கோலைப்பார். முதற்கையில் இருக்கிற கோல் தூரத்தில் இருக்கிற ஒரு பொருளைச் சுட்டிக் காட்டுகிறது. அப்படியே அ என்னும் எழுத்து தூரத்தில் உள்ள பொருளைச் சுட்டிக்காட்டும். அ என்னும் எழுத்து தூரத்தில் உள்ள பொருளைச் சுட்டிக்காட்டும்பொழுது அதற்குச் **சுட்டெழுத்து** என்று பெயர்.

நடுவில் உள்ள படத்தைப் பார். நடுக் கையில் இருக்கிற கோல் இடையில் உள்ள பொருளைச் சுட்டிக் காட்டுகிறது. அப்படியே உ என்னும் எழுத்து நடுவிலுள்ள பொருளைச் சுட்டிக் காட்டும். "உ" என்னும் எழுத்து அப்படிச் சுட்டிக் காட்டும்பொழுது, அதையும் **சுட்டெழுத்து** என்கிறோம். "உ" என்னும் சுட்டெழுத்து பாட்டில் மாத்திரமே வரும்; வசன நடையில் வருவதில்லை.

கடைசியில் இருக்கிற படத்தைப் பார். இந்தக் கையில் உள்ள கோல் சமீபத்தில் இருக்கிற பொருளைச் சுட்டிக் காட்டுகிறது. அப்படியே "இ" என்னும் எழுத்தும் சமீபத்தில் உள்ள பொருளைச் சுட்டிக் காட்டும். அவ்வாறு சுட்டிக் காட்டும்பொழுது அதையும் சுட்டெழுத்து என்று சொல்லுகிறோம்.

அப்படியானால் "அ" "உ" "இ" என்னும் மூன்றெழுத்துக்களும் பொருள்களைச் சுட்டிக் காட்டுவதனால் அவை சுட்டெழுத்தெனப்படும்.

அ + மனிதன் = அம்மனிதன்
உ + மனிதன் = உம்மனிதன்
இ + மனிதன் = இம்மனிதன்

இந்த மூன்று சுட்டெழுத்துக்களும் முறையே "அந்த," "உந்த," "இந்த" என்று திரிந்து வரும்.

அந்த மனிதன்
உந்த மனிதன்
இந்த மனிதன்

இந்த மொழிகளில் உள்ள சுட்டெழுத்துக்களைத் தனி வார்த்தைகளாகப் பிரிக்க முடியுமா என்று பார்.

| | | |
|---|---|---|
| அவன் | அவள் | அவர் |
| உவன் | உவள் | உவர் |
| இவன் | இவள் | இவர் |
| அது | அவை | அங்கு |
| உது | உவை | உங்கு |
| இது | இவை | இங்கு |

இந்தச் சுட்டெழுத்துக்கள் சில வார்த்தைகளின் முதலில் நிற்பதோடு வார்த்தையை விட்டுப் பிரிக்க முடியாதபடி இருக்கின்றன. அப்படி நிற்கும் சுட்டெழுத்துக்களைப் பிரித்தால் அந்த வார்த்தைகளுக்குப் பொருள்

இராது. இப்படி வார்த்தைகளோடு கலந்து நிற்கிற சுட்டெழுத்துக்களுக்கு அகச் சுட்டுக்கள் என்று பெயர்.

இந்த மொழிகளிலுள்ள சுட்டெழுத்துக்களைப் பிரித்துப் பார். இவற்றைப் பிரிக்கும்பொழுது சொற்களின் பொருள் கெடுகிறதா என்று கவனி.

| | | |
|---|---|---|
| அம் மனிதன் | அப் பெண் | அப் பசு |
| உம் மனிதன் | உப் பெண் | உப் பசு |
| இம் மனிதன் | இப் பெண் | இப் பசு |

இச் சுட்டெழுத்துக்கள் பல சொற்களின் முதலில் நின்றாலும், சொற்களோடு கலவாமல் எளிதில் பிரிக்கக் கூடிய விதமாயிருக்கின்றன. இத்தொடர் மொழிகளில் உள்ள சுட்டெழுத்துக்களைப் பிரித்தாலும், சொற்களின் பொருள் கெடாது. இப்படிச் சொற்களின் முதலில் நின்றும் அவற்றோடு கலவாமல் நிற்கிற சுட்டுகளுக்குப் புறச் சுட்டுக்கள் என்று பெயர்.

பயிற்சி :—

1. கீழ் உள்ள எழுத்துக்களில் எவை சுட்டெழுத்துக்களாய் வரும்.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |

2. கீழ் உள்ள மொழிகளில் சுட்டெழுத்துக்களைக் கீற்றிட்டுக் காட்டு. இவற்றிற்கெதிராக இவை என்ன சுட்டு என்றும் எழுது.

| | | | |
|---|---|---|---|
| அவர்கள் | இம்மரம் | அம்மாடு | அருமை |
| அரசன் | இடம் | அம்மா | இப்படி |
| அம்மரம் | உத்தரம் | இந்த | அப்படி |
| அரம் | உவ்வீடு | அந்த | இவ்விதம் |

3. கீழே கீற்றிட்ட இடங்களில் ஏற்ற சுட்டுக்களை அமைத்துப் படி.

நான் ——— ஊருக்குப் போனேன். ——— மனிதன் இங்கே வந்தான். ——— அரசர் இந்த ஊருக்கு வந்தார். ——— மகள் யார்? அவன் ——— படி ஒரு கடிதம் எழுதினான். வங்காளக் குடாவின் ——— கரையில் இருக்கும் நாடு எது?

4. அ, இ, உ, என்னும் எழுத்துக்களைப் புறச்சுட்டுக்களாகச் சொற்களோடு சேர்க்கும்பொழுது ஏற்படுகிற சில மாறுதல்களைக் கவனித்து எழுது.

அ + வீடு, அ + பசு, அ + மரம், இ + அரம், அ + அரிசி, அ + ஊர், இ + ஊர், அ + சட்டம், இ + சட்டம், அ + தகரம், இ + நகரம்.

5. அ, இ, உ திரிந்து வந்த சுட்டுக்களாகிய அந்த, இந்த, உந்த என்பவற்றை ஏற்றபடி சொற்களோடு கூட்டி எழுது. அப்படிக் கூட்டி எழுதும்பொழுது உண்டாகும் மாறுதல்களைக் கவனி.

அந்த + வீடு, அந்த + பசு, அந்த + மரம், அந்த + அரசர், அந்த + ஊர், இந்த + உரல், அந்த + கிண்ணம், இந்த + கிண்ணம், அந்த + சட்டம், இந்த + தகரம்.

## வினா எழுத்துக்கள்

நாம் பல சமயங்களில் கை ஜாடைகள் காட்டிப் பேசுகிறோம். ஏதாவது ஒரு விஷயத்தைத் தேடவோ, அல்லது ஒரு விஷயத்தைக் குறித்துக் கேள்வி கேட்கவோ விரும்பினால் கை விரல்களை மூடிக்கொண்டு கையை இப்படிக் காட்டுகிறோம். ஆகையால் இந்தக் கை ஜாடைக்குக் கேள்விச் சைகை என்று பெயர். அந்தச் சைகையை வரி வடிவத்தில் '?' என்



னும் அடையாளத்தினுல் காட்டுகிறோம். அந்த அடையாளத்திற்கு வினுக்குறி என்று பெயர்.

நாம் பேசுகிறபொழுது கைச் சைகையினுல் வினுப் பொருளை உணர்த்துகிறோம். அதுபோலப் பாஷையில் சில எழுத்துக்களினுலும் வினுப்பொருளை உணர்த்துகிறோம்.

கீழே கொடுத்திருக்கும் வாக்கியங்களை வினு வாக்கியங் களாக மாற்றுவதற்கு என்ன செய்கிறோம் என்று கவனியுங்கள் ?

| | | |
|---|---|---|
| 1. | அவனுக்குக் கொடுத்தேன். | எவனுக்குக் கொடுத்தேன் ? |
| 2. | அவள் வந்தாள். | எவள் வந்தாள் ? |
| 3. | அது வருகிறது. | எது வருகிறது ? |
| 4. | இராமன் வந்தான். | (1) இராமன் வந்தானு ? |
| | | (2) இராமன் வந்தானே ? |
| 5. | வந்தார். | (1) யார் வந்தார்? (4) வந்தாரா ? |
| | | (2) எவர் வந்தார்? (5) வந்தாரோ ? |
| | | (3) ஏன் வந்தார் ? |

முதல் மூன்று வாக்கியங்களை வினுவாக்கும்பொழுது "எ" என்னும் ஒரே எழுத்து வினுப்பொருளைக் கொடுக் கிறது. நான்காவது வாக்கியத்தை வினுவாக்கும்பொழுது "ஆ" "ஓ" என்னும் எழுத்துக்கள் வினுப்பொருளைக் கொடுக்கின்றன. ஐந்தாவது வாக்கியத்தை வினுவாக்கும் பொழுது "யா" "எ" "ஏ" "ஆ" "ஓ" என்னும் எழுத் துக்கள் யாவும் வினுப்பொருளைத் தருகின்றன என்பதைக் கவனியுங்கள்.

அப்படியானுல் வினுப்போருளை உணர்த்தும் எழுத்துக் கள், "எ," "யா," "ஆ," "ஓ," "ஏ" என்பனவாம்.

இவைகளில் எந்தெந்த எழுத்துக்கள் சொற்களின் முதலிலும் கடைசியிலும் வருமென்று கவனியுங்கள்.

**எ**வன் **எ**வர் **எ**வள்

(i) "எ" சொற்களின் முதலில் வினுவாக வந்தது.

**யா**வன் **யா**வள் **யா**து

(ii) "யா" சொற்களின் முதலில் வினுவாக வந்தது.

**ஏ**ன் **ஏ**து

(iii) "ஏ" சொற்களின் முதலில் வினுவாக வந்தது.

அவ**ஞ** அது**வா** வந்தா**ஞ**

(iv) "ஆ" சொற்களின் கடைசியில் வினுவாக வந்தது.

அவ**ேஞ** அது**வோ** வந்தா**ேஞ**

(v) "ஓ" சொற்களின் கடைசியில் வினுவாக வந்தது.

எ, ஏ, யா முதலும், ஆ, ஓ ஈற்றும் வினுவாகும்.

பயிற்சி :—

1. சுட்டெழுத்துக்கள் எவை ? அவை எத்தனை ?

2. அகச் சுட்டு என்றால் என்ன ?

3. புறச் சுட்டுகளுக்குச் சில உதாரணங்கள் சொல்.

4. வினா எழுத்துக்கள் எவை ? அவை எத்தனை ?

5. மொழிக்கு முதலில் வரும் வினா எழுத்துக்கள் எவை ?

6. மொழிக்கு ஈற்றில் வரும் வினா எழுத்துக்கள் எவை ?

7. கீழ் வரும் வாக்கியங்களை வினா வாக்கியங்களாக மாற்றி எழுது.

(1) தசரதன் மகன் இராமன். (2) நேற்று வந்தவர் என் தந்தை. (3) இராமன் சென்றான். (4) கண்ணன் வெண்ணெய் தின்றான். (5) உபாத்தியாயர் வந்தார். (6) மன்னனைக் கண்டார். (7) கந்தன் அடி தொழுதான்.

8. கீழ்வரும் வினா வாக்கியங்களை விடை வாக்கியங்களாக மாற்றி எழுதுக.

(1) இராமன் கானகம் சென்றானா? (2) எவன் வந்தான் ? (3) யார் எழுதிய படம் இது ? (4) என் நேற்று வரவில்லை ? (5) அவன் உமது மகனோ ? (6) உபாத்தியாயர் இன்று வந்தாரோ ? (7) அவன் வேகமாக ஓடுவானா ?

## தமிழ் எழுத்துக்களின் விளக்கம்.

எழுத்து

I உயிர் எழுத்து (12) II மெய் எழுத்து (18) III உயிர் மெய்யெழுத்து (216) IV ஆய்தம் (1)

குறில் (5) நெடில் (7) வல்லினம் (6) மெல்லினம் (6) இடையினம் (6)

III உயிர்மெய் எழுத்துக்கள் (216)

| உயிர்மெய்க் குறில் | உயிர்மெய் நெடில் |
|---|---|
| $(5 \times 18 =)$ 90 | $(7 \times 18 =)$ 126 |
| வல்லினம் $(5 \times 6 =)$30 | வல்லினம் $(7 \times 6 =)$42 |
| மெல்லினம் $(5 \times 6 =)$30 | மெல்லினம் $(7 \times 6 =)$42 |
| இடையினம் $(5 \times 6 =)$30 | இடையினம் $(7 \times 6 =)$42 |

## வடமொழி எழுத்துக்கள்

சம்ஸ்கிருத பாஷையை வடமொழி என்றும் தமிழ் பாஷையைத் தென்மொழி அல்லது தமிழ்மொழி என்றும் கூறுவது வழக்கம். நம்முடைய முன்னோர்கள் வடமொழியில் உள்ள பல சொற்களைத் தென் மொழியில் புகுத்தி யிருக்கிறார்கள். அப்படிப் புகுத்தப் பட்டிருக்கும் சொற்களை வட மொழிப்படி எழுதவேண்டுமானால், தமிழில் சில எழுத்துக் கள் வேண்டும். ஏனென்றால் அந்த எழுத்துக்கள் தமிழில் இல்லை. ஆகையால் நாம் வடமொழியிலிருந்து சில எழுத் துக்களைக் கடன் வாங்கி யிருக்கிறோம். அந்த எழுத்துக்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| ஜ | ஷ | ஸ | ஹ | க்ஷ |

என்பனவாம்.





அம்புஜம் வாஹனம் ரிஷி




புஸ்தகம் பக்ஷணம்

பயிற்சி :—

பின்வரும் சொற்களில் வடமொழி எழுத்துக்களின் கீழ்க் கோடிட்டுக் காட்டு.

| | |
|---|---|
| வஸ்திரம் | முஹூர்த்தம் |
| கஷ்டம் | தக்ஷிணாமூர்த்தி |
| இந்திர ஜாலம் | இரக்ஷிப்பார் |
| விவாஹ மண்டபம் | சந்தோஷம் |

# II. சொல்லியல்

## சொல்

  

கை, பூ, ஈ,

தை, வா.

இவை ஓரெழுத்தால் ஆன சொற்கள். ஒவ்வொரு எழுத்தும் தனித்தனி நின்று ஒவ்வொரு பொருளை உணர்த்தியது.

  

கிளி, பந்து, குரங்கு,

பாட்டனார், தகப்பனார்.

இவை ஒவ்வொன்றும் ஒன்றுக்கு அதிகமான எழுத்துக்களால் ஆகி ஒவ்வொரு பொருளை உணர்த்துவதைக் காணலாம்.

எழுத்துக்கள் தனித்தாயினும், இரண்டு முதலாகத் தொடர்ந்தாயினும் ஒரு பொருளைத் தெரிவித்தால் சொல்லாகும். (சொல் = வார்த்தை = மொழி.)

# I. பெயர்ச்சொல்

சித்திர முறை இலக்கணம் முதற் புத்தகத்தில், "பொருள்களின் பெயரைத் தெரிவிக்கும் சொல் பெயர்ச் சொல்லாம்" என்று அறிந்து கொண்டீர்கள். பெயர்ச் சொல்லின் வகைகளை இங்குப் படிப்போம்.

## (க) பொருட்பெயர்







தென்னை, மயில், வண்ணான்,

குடியானவன், சிறுமி, மனிதன், நாற்காலி, குடை.

இச் சொற்கள் பொருளின் பெயரை உணர்த்துவதால் இவை பொருட் பெயர்.

## (உ) இடப்பெயர்







வீடு, கிணறு, மலை,

பூஞ்சோலை, காடு, வயல், தெரு, புல்தரை.

இச் சொற்கள் இடத்தின் பெயரை உணர்த்துவதால் இவை இடப்பெயர்.

## (௩) காலப்பெயர்

நாள், ஆவணி, சனி, பிரபவ, சித்திரை, வாரம், ஞாயிறு, கார், மாசி, காலை, மாலை, இரவு.

இவை காலத்தைத் தெரிவிப்பதால் காலப் பெயராம்.

TB
P31(6)
N33

## (௪) சினைப்பெயர்



கண்,



கால்,



கொம்பு,

கை, தலை, வால், கிளை, பூவிதழ்.

ஒரு பொருளின் பாகத்தைத் தெரிவிக்கும் பெயர் சினைப்பெயர் எனப்படும்.

ஒரு பொருளின் முழு வடிவத்தையும் உணர்த்தும் பெயர் பொருட் பெயர் எனப்படும். ஒரு பொருளின் பாகத்தை மாத்திரம் உணர்த்தும் பெயர் சினைப்பெயர் எனப்படும். மரம் என்னும் சொல் ஒரு பொருளின் முழு வடிவத்தையும் உணர்த்தும். ஆகையால் அது பொருட் பெயர் எனப்படும். கிளை, இலை, வேர் முதலியன மரத்தின் உறுப்புக்களாம். ஆகையால் அவை சினைப் பெயர் அல்லது உறுப்புப்பெயர் எனப்படும்.

## (௫) குணப்பெயர் அல்லது பண்புப்பெயர்

கருமை, வட்டம், நன்மை, தீமை, செம்மை, இனிமை, பசுமை.

86394

இவை குணங்களின் பெயர்; குணப்பெயர் அல்லது பண்புப் பெயர் எனப்படும்.

## (௬) தொழிற் பெயர்

தடுத்தல், தட்டுதல், வாடுதல், நடத்தல், வருதல், ஆடுதல், பாடுதல், உண்ணல், தின்னல்.

தொழிலைத் தெரிவிக்கும் பெயர், தொழிற் பெயர்.

| |
|---|
| பெயர்ச் சொற்கள் ஆறு வகைப்படும். |
| பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், குணப்பெயர், தொழிற்பெயர். |

பயிற்சி :—

1. பின்வரும் சொல் ஒவ்வொன்றும் எத்தனை எழுத்துக்களால் அமைந்தது :—

(க) வௌவால் (உ) சென்னைப் பட்டணம்
(௩) விவேகம் (ச) பை (ரு) தை

2. அடியில் காட்டியவிதம் ஒரு பட்டிகை அமைத்துக் கீழே வரும் வாக்கியங்களில் உள்ள பெயர்களை அவை ஒவ்வொன்றும் என்ன பெயர் என்று பிரித்து எழுது.

கண்ணன் கண்கள் வெண்தாமரை மலர் போன்றன. இளவேனில் காலத்தில் மரங்களில் தளிர் தோன்றி மலர் தோன்றும். மல்லிகையில் வெண்மையான மலர்கள் தோன்றும். அவனுடைய வாழ்க்கை உண்ணலும், உறங்கலுமாய் முடிந்தது. அவன் பிழைத்தலுக்கு வழியின்றி வருந்தினன். நாளைக் காலையில் அந்த ஊருக்குப் போ.

| பொருள் | இடம் | காலம் | சினை | குணம் | தொழில் |
|---|---|---|---|---|---|
| | | | | | |

### திணை, பால், எண், இடம், வேற்றுமை

முந்திய புத்தகத்தில் பெயர்ச்சொற்கள் (1) எண், (2) திணை, (3) பால், (4) இடம், (5) வேற்றுமை, இவற்றைக்காட்டும் என்பதை அறிந்து கொண்டோம். அவைகளை இங்கு விரிவாகப் படிப்போம்.

# 1. எண்

| ஒருமை | பன்மை |
|---|---|
| ஒரு பொருளைக் குறிக்கும் பெயர். | ஒன்றுக்கதிகமான பொருளைக் குறிக்கும் பெயர். |
|  பூ |  பூக்கள் |
|  சிறுவன் |  சிறுவர் |
| ஆடவன் | ஆடவர் |
| அவன் | அவர்<br>அவர்கள் |
| அது | அவை<br>அவைகள் |
| சிறுமி | சிறுமியர்<br>சிறுமியர்கள் |
| மனைவி | மனைவியர்<br>மனைவியர்கள் |
| அண்ணன் | அண்ணன்மார் |
| நான் | நாம், நாங்கள் |
| நீ | நீர், நீங்கள் |

ஒரு பொருளைக் குறிக்கும் பெயர்கள் ஒருமை எண்; ஒன்றுக்கு அதிகமான பொருள்களைக் குறிக்கும் பெயர்கள் **பன்மை எண்**.

## 2. திணை

திணை யென்ருல் குலம் அல்லது ஜாதி என்று பொருள். அது உயர்திணை, அஃறிணை என இருவகைப்படும்.

(1) கீழே உள்ள சொற்கள் உயிரில்லாத பொருள்களின் பெயர்களாம்.







கதவு, நாற்காலி, புத்தகம்,
பேனு, மேசை, கை, வீடு, பூ, மரம், பனை.

(2) கீழே உள்ள சொற்கள் உயிருள்ளவைகளின் பெயர்களாம்.







அணில், ஆடு, புழு,
வண்ணுத்திப் பூச்சி, மீன், குரங்கு, கிளி, பசு, நாய், பூனை.

இவை பகுத்தறிவு இல்லாதவை.

(3) கீழே உள்ள சொற்கள் யாவும் உயிரும், நல்லது கெட்டது இதுவெனப் பகுத்தறியக்கூடிய அறிவுமுள்ள பொருள்களின் பெயர்களாம்.



சிறுவன்,



சிறுமி,



மனிதன்,

பெண், வண்ணான், தட்டான், இராசா, உபாத்தியாயர், அரசி, வண்ணாத்தி, தேவன்.

இவை பகுத்தறிவுடையவை.

பகுத்தறிவு உள்ளவர்கள் உயர்ந்த ஜாதி யாகையால் அவர்களைப்பற்றிய சொற்கள் உயர்திணை என்று சொல்லப்படும்; பகுத்தறிவில்லாதவைகளை அஃறிணை என்கிறோம்.

மனிதரும் தேவரும் உயர்திணைப் பெயர்கள். இவர்களைத் தவிர, மற்ற உயிருள்ள பொருள்களும் உயிரில்லாத பொருள்களும் அஃறிணைப் பெயர்கள்.

[உயர்திணை = உயர்வாகிய குலம்; அஃறிணை = (அல் + திணை) உயர்வு அல்லாத குலம்.]

## 3. பால்

(பால்=பகுப்பு=பிரிவு)

### (1) ஆண் பால் (உயர்திணையில் ஒருமை)

  

அரசன், மகன், சிறுவன்,

வண்ணான், குயவன், இடையன், வேலைக்காரன், குறவன், அண்ணன், மாமன், தந்தை, தம்பி.

இந்தப் பெயர்கள் ஆண் இனத்தைக் குறிப்பதனால் இவை யாவும் ஆண்பால் பெயர்கள் என்று சொல்லப்படும். ஆண் இனத்தைக்காட்டுகிற பெயர்கள் ஆண்பால் பெயர்கள்.

### (2) பெண் பால் (உயர்திணையில் ஒருமை)

  

அரசி, மகள், சிறுமி,

வண்ணாத்தி, குயத்தி, இடைச்சி, வேலைக்காரி குறத்தி, அக்காள், மாமி, தாய், தங்கை.

இப்பெயர்கள் யாவும் பெண் இனத்தைக் குறிப்பதனால் இவை யாவும் பெண்பால் பெயர்கள் என்று சொல்லப்படும். பெண் இனத்தைக் காட்டுகிற பெயர்கள் பெண் பால் பெயர்கள்.

### (3) பலர் பால் (உயர்திணையில் பன்மை)







அரசர், அரசியர், மனிதர்கள்,

சிறுவர், சிறுமியர், மக்கள், அண்ணன்மார், தங்கைமார், சகோதரர்கள்.

ஆண்பாலின் கூட்டத்தையாவது, பெண்பாலின் கூட்டத்தையாவது, ஆண்பாலும் பெண்பாலும் சேர்ந்த கூட்டத்தையாவது, சேர்த்துப் பொதுப்படக் குறிக்கிற பெயர்கள் பலர் பால் பெயர்கள் எனப்படும். பலர் பால் என்பது ஆண்பால் பெயர்களுக்கும் பெண்பால் பெயர்களுக்கும் பொதுவான பாலாகும்.

### (4) ஒன்றன் பால்

(அஃறிணையில் ஒருமை)







பசு நாய் பூனை

நாற்காலி, மேஜை, பூ, அணில், மாடு.

இவை ஒன்றைக்குறிக்கும் பெயர்கள்.

ஒன்றைக் குறிக்கும் பெயர்களை ஒன்றன் பால் என்று கூறுகிறோம். உயிருள்ளதும் உயிரில்லாததுமான பகுத்தறிவு இல்லாத எந்தப் பொருளையும், பிராணியையும் குறிக்கும் பெயர் ஒன்றன்பால் பெயர் ஆகும்.

## (5) பலவின் பால்

(அஃறிணையில் பன்மை)







பசுக்கள், நாய்கள், பூனைகள்,

நாற்காலிகள், மேஜைகள், பூக்கள், அணில்கள், மாடுகள், குரங்குகள், வண்ணாத்திப் பூச்சிகள்

இவை பலவற்றைக் குறிக்கும் பெயர்கள்.

பலவற்றைக் குறிக்கும் பெயர்களைப் பலவின்பால் என்று கூறுகிறோம். உயிருள்ளவைகளும், உயிரில்லாதவைகளுமான (பல பகுத்தறிவற்ற ஒன்றுக்குமேலான) பொருள்களையும், பிராணிகளையும் குறிக்கும் பெயரைப் பலவின்பால் பெயர் என்று சொல்லுகிறோம்.

பெயர்களின் திணையைப் பற்றிய பால்கள் ஐந்து வகைப்படும்.—

1. ஆண்பால் } உயர்திணை ஒருமைக்கு
2. பெண்பால் } உரியவை.
3. பலர்பால் உயர்திணைப் பன்மைக்கு உரியது.
4. ஒன்றன் பால் அஃறிணை ஒருமைக்கு உரியது.
5. பலவின் பால் அஃறிணைப் பன்மைக்கு உரியது.

## 4. இடம்.

சொற்கள் வழங்குதற்குரிய ஸ்தானத்திற்கு இடம் என்று பெயர். இடம், தன்மை, முன்னிலை, படர்க்கை என மூன்று வகைப்படும்.

பேசுபவர் தன்மையிடத்தைச் சார்ந்தவர்.

(உ-ம்) நான், நாம், நாங்கள்.

முன்னின்று கேட்பவர் முன்னிலையிடத்தைச் சார்ந்தவர்.

(உ-ம்) நீ, நீர், நீங்கள்.

தன்மையிடத்துப் பெயர்களாலும் முன்னிலையிடத்துப் பெயர்களாலும் பேசப்படும் பெயர்கள் படர்க்கை யிடத்தைச் சார்ந்தவை.

(உ-ம்) அவன், அவள், அவர், அவர்கள், அது, அவை.

தன்மை இடப் பெயர்களாவன :—

ஒருமை :—நான், யான்

பன்மை :—நாம், யாம், நாங்கள், யாங்கள் என்பவை.

பேசுகிறவர் ஒருவராகில் "நான்" என்றும் "யான்" என்றும் சொல்லுகிறோம். பேசுகிறவர் பலராகில் "நாம்" என்றும், "யாம்" என்றும், "நாங்கள்" என்றும், "யாங்கள்" என்றும் சொல்லுகிறோம்.

இத் தன்மைப் பெயர்களில், "யான்", "யாம்", "யாங்கள்" என்பன, பேச்சு வழக்கில் வாரா. செய்யுள் வழக்கில் வரும்.

முன்னிலை இடப் பெயர்களாவன :—

ஒருமை—நீ.

பன்மை—நீர், நீங்கள் என்பவை.

முன்னிற்பவர் ஒருவர் ஆனால் "நீ" என்றும், பலர் ஆனால் "நீர்" என்றும் "நீங்கள்" என்றும் சொல்லுகிறோம்.

படர்க்கை இடப் பெயர்களாவன :—

அவன், இடையன், சிறுவன்,—படர்க்கை ஆண்பால், ஒருமை.

அவள், இடைச்சி, சிறுமி—படர்க்கைப் பெண் பால், ஒருமை.

| | | | |
|---|---|---|---|
| அவர்<br>அவர்கள் | இடையர்<br>இடையர்கள் | சிறுவர்<br>சிறுவர்கள் | —படர்க்கைப்<br>பலர்பால் |

இம் மூன்றுவிதப் படர்க்கை இடங்களும் [பன்மை உயர்திணைக் குரியன.

அது, மாடு, மரம்,—படர்க்கை ஒன்றன் பால் ஒருமை.

அவை, அவைகள், மாடுகள், மரங்கள்—படர்க்கைப் பலவின் பால் பன்மை.

குறிப்பு:—படர்க்கையில் திணை, பால், எண், ஆகிய மூன்றும் தெரியும். தன்மை, முன்னிலை இடங்களில் எண் மாத்திரம் தெரியுமேயன்றித் திணையும் பாலும் வெளிப் படையாகத் தெரியா.

## 5. வேற்றுமை

நாம் பேசும்போதும், எழுதும்போதும் நமது கருத் தைத் தெளிவாகப் பிறருக்கு அறிவிக்கவேண்டுமானால் சில இடங்களில் வார்த்தைகளுக்கு இடையே வேறு சில சொற் களைச் சேர்த்துச் சொல்லவேண்டும்.

என் - வீடு இவ்வார்த்தைகளுக்கு இடையே "உடைய" என்று ஒரு சொல்லைச் சேர்த்துச் சொன்னால் 'என் உடைய வீடு' என்று கருத்துத் தெளிவாகப் புலப்படுகிறது.

## வேற்றுமை உருபு

இங்குச் சேர்த்துச் சொல்லிய 'உடைய' என்ற சொல் வேற்றுமை உருபு என்று சொல்லப்படும். இதைப் போல இன்னும் சில வேற்றுமை யுருபுகளும் உண்டு.

பின்வரும் வார்த்தைகளின் இடையில் தக்க உருபு களைச் சேர்த்துப் படியுங்கள் :—

உழவன் வயல்—உழுதான்
அவன் நல்ல பலன்—அடைந்தான்

அக்காள் கை—எழுதுகிறாள்
இது தச்சன்—செய்யப்பட்டது
இராமன்—பேசிக்கொண்டிருந்தேன்
நல்லவர்—சிநேகம் செய்

பாடசாலை—போவோம்
தலை—குல்லா வாங்கினான்

முருகன் மாடி—இறங்கினான்
தந்தை ஊர்—திரும்பினார்

அது என்—புத்தகம்
வேலன்—வீடு எது ?

விரல்—மோதிரம் அணிந்தான்
கை—பந்து வைத்திருக்கிறான்

அண்ணன்—ஓடிவா
தாய்—சோறிடு

இங்கே நீங்கள் சேர்த்துப்படித்த உருபுகள் ஐ, ஆல், ஓடு, கு, இருந்து, உடைய, இல், ஏ, என்பவை.

இந்த ஏழு வேற்றுமை உருபுகளைத் தவிர வேறொரு முக்கியமான வேற்றுமையும் உண்டு :—"உழவன்" உழுதான், "அக்காள்" எழுதுகிறாள் என்ற வாக்கியங்களில் முதலில் நிற்கும் உழவன், அக்காள் என்ற சொற்கள்

முதல்வேற்றுமையாம். இதுஎழுவாய் வேற்றுமை யென்னப் படும். ஆக எட்டு வேற்றுமைகள் உண்டு.

(1) முதல் வேற்றுமை விகாரமில்லாத பெயர்ச்சொல்
(உ - ம்) உழவன் உழுதான்

(2) இரண்டாம் வேற்றுமை உருபு—ஐ.
வயல் + ஐ = வயலை.

(3) மூன்றும் வேற்றுமை உருபுகள்—ஆல், ஓடு.
கை + ஆல் = கையால்
நல்லவர் + ஓடு = நல்லவரோடு

(4) நான்காம் வேற்றுமை உருபு—கு.
பாடசாலை + கு = பாடசாலைக்கு.

(5) ஐந்தாம் வேற்றுமை உருபு—இருந்து.
ஊர் + (இல்) இருந்து = ஊரிலிருந்து.

(6) ஆறும் வேற்றுமை உருபு— உடைய.
வேலன் + உடைய = வேலனுடைய.

(7) ஏழாம் வேற்றுமை உருபு—இல்.
கை + இல் = கையில்.

(8) எட்டாம் வேற்றுமை உருபு—ஏ.
தாய் + ஏ = தாயே.

எட்டாம் வேற்றுமை ஒருவரைக் கூப்பிட்டு அழைப்ப தற்கு வருவதால் விளிவேற்றுமை எனவும்படும்.

(விளித்தல் = கூப்பிடுதல்)

இந்த எட்டு வேற்றுமைகளில் மூன்றும் வேற்று மைக்கு இரண்டு உருபுகளும், மற்ற வேற்றுமைக்கு ஒவ் வோர் உருபும் படித்தீர்கள்.

## சாரியை

முன் படித்த வேற்றுமை உருபுகளில் ஐந்தாம் வேற்றுமையின் உருபு யாது? "இருந்து" என்பது. இதை ஒரு பெயர்ச்சொல்லோடு சேர்த்துப் படித்தால் ஊர்+இருந்து= ஊரிருந்து என்று படிக்கவேண்டும்; நாம் அப்படிப் படிப்பதில்லை. "ஊரிலிருந்து" என்று படிக்கிறோம். ஊர்+இல்+இருந்து இதில் பெயர்ச் சொல்லுக்கும் வேற்றுமையுருபிற்கும் இடையில் உள்ள "இல்" என்ற சொல் சாரியையென்னப்படும்.

பின்வரும் பெயர்ச்சொற்களோடு வேற்றுமையுருபுகளைச் சேர்க்கும்போது வரும் சாரியைகளைக் கவனியுங்கள்

(1) அவன்+கு = அவன்+உ+கு = அவனுக்கு—
"உ" சாரியை.

புலி+உடைய = புலி+இன்+உடைய = புலியினுடைய—"இன்" சாரியை

இன்னும் வேறு சில சாரியைகளும் வருவதைப் பின்வரும் உதாரணங்களில் கவனியுங்கள் :—

(2) மரம், நிலம் என்ற "ம்" என்னும் எழுத்தைக் கடைசியிலுடைய சொற்கள் வேற்றுமை ஏற்கும்போது என்ன சாரியை வருகிறது ?

மரம்+ஐ = மரம்+அத்து+ஐ = மரத்தை —
"அத்து" சாரியை

நிலம்+இல் = நிலம்+அத்து+இல் = நிலத்தில்.
"அத்து" சாரியை

இங்கு, மரம், நிலம் என்ற சொற்களின் ஈற்றெழுத்தாகிய "ம்" என்பது "அத்து" என்னும் சாரியை ஏற்கும்போது கெடுதல் விகாரம் அடைகின்றது.

மரம் + அத்து = மாத்து
நிலம் + அத்து = நிலத்து

(3) பல, சில என்ற சொற்கள் வேற்றுமை யேற்கும் போது என்ன சாரியை வருகிறது?

பல + ஐ = பல + அற்று + ஐ = பலவற்றை
சில + ஐ = சில + அற்று + ஐ = சிலவற்றை

அவை, இவை, எவை என்ற சொற்கள் வேற்றுமை யேற்கும்போதும் "அற்று"ச் சாரியையே பெறும்.

அவை + ஐ = அவை + அற்று + ஐ = அவற்றை—"அற்று" சாரியை
இவை + ஆல் = இவை + அற்று + ஆல் = இவற்றால்—"அற்று" சாரியை
எவை + இல் = எவை + அற்று + இல் = எவற்றில்—"அற்று" சாரியை

இச்சொற்களின் ஈற்றில் இருந்த "ஐ" கெட்டதைக் கவனியுங்கள்.

அவை + அற்று = அவ் + அற்று = அவற்று
இவை + அற்று = இவ் + அற்று = இவற்று
எவை + அற்று = எவ் + அற்று = எவற்று

## தன்மை முன்னிலைப்பெயர்கள் வேற்றுமை ஏற்றல்.

I. தன்மை யொருமைப் பெயர்களாகிய 'நான்' 'யான்' என்பவை உருபு ஏற்கும்பொழுது 'என்' எனத் திரியும்.

(உ - ம்) நான் + ஐ = என் + ஐ = என்னை, இவ்வாறே என்னால், எனக்கு, என்னிலிருந்து, என்னுடைய, என்னில் எனவரும்.

II. தன்மைப் பன்மைப் பெயர்கள் வேற்றுமை உருபு ஏற்கும்பொழுது

‘ நாம் ’ என்பது ‘ நம் ’ என்றும்
‘ யாம் ’ என்பது ‘ எம் ’ என்றும்,
‘ நாங்கள் ’ என்பது ‘ எங்கள் ’ என்றும்
‘ யாங்கள் ’ என்பது ‘ எங்கள் ’ என்றும்
} திரியும்.

(உ - ம்) நாம் + ஐ = நம் + ஐ = நம்மை
யாம் + ஐ = எம் + ஐ = எம்மை
நாங்கள் + ஐ = எங்கள் + ஐ = எங்களை
யாங்கள் + ஐ = எங்கள் + ஐ = எங்களை.

III. முன்னிலை ஒருமைப் பெயராகிய ‘ நீ ’ என்பது ‘ உன் ’ எனத் திரிந்து வேற்றுமை உருபு ஏற்கும்.

(உ - ம்) நீ + ஐ = உன் + ஐ = உன்னை, இவ்வாறே உன்னால், உனக்கு, உன்னிலிருந்து, உன்னுடைய, உன்னில் எனவரும்.

IV. முன்னிலைப் பன்மைப் பெயர்கள் வேற்றுமை, யுருபு ஏற்கும்பொழுது ‘ நீர் ’ என்பது ‘ உம் ’ எனவும் ‘ நீங்கள் ’ என்பது ‘ உங்கள் ’ எனவும் திரியும்

(உ - ம்) நீர் + ஐ = உம் + ஐ = உம்மை, இவ்வாறே உம்மால், உமக்கு, உம்மின், உம்முடைய, உம்மில் எனவரும்.

நீங்கள் + ஐ = உங்கள் + ஐ = உங்களை, இவ்வாறே உங்களால் , உங்களுக்கு, உங்களிலிருந்து உங்களுடைய, உங்களில் எனவரும்.

பின் குறித்த பட்டிகையில் முதல் வேற்றுமையாகிய பெயர்ச்சொற்கள் மற்ற வேற்றுமை யுருபை யேற்று வருவதைக் கவனியுங்கள்.

வேற்றுமை.

| 1. தந்தை | மகன். | மரம். | கண். | பசு. |
|---|---|---|---|---|
| 2 தந்தையை | மகனை | மரத்தை | கண்ணை | பசுவை |
| 3 தந்தையால் | மகனால் | மரத்தால் | கண்ணால் | பசுவால் |
| ,, தந்தையோடு | மகனோடு | மரத்தோடு | கண்ணோடு | பசுவோடு |
| 4 தந்தைக்கு | மகனுக்கு | மரத்துக்கு | கண்ணுக்கு | பசுவுக்கு |
| 5 தந்தையிலிருந்து | மகனிலிருந்து | மரத்திலிருந்து | கண்ணிலிருந்து | பசுவிலிருந்து |
| 6 தந்தையினுடைய | மகனுடைய | மரத்தினுடைய | கண்ணினுடைய | பசுவினுடைய |
| 7 தந்தையில் | மகனில் | மரத்தில் | கண்ணில் | பசுவில் |
| 8 தந்தையே ! | மகனே ! | மரமே ! | கண்ணே ! | பசுவே ! |

வேற்றுமை.

| 1. பாம்பு. | பூனை. | கிளி. | ஆடு. | ஆறு. |
|---|---|---|---|---|
| 2 பாம்பை | பூனையை | கிளியை | ஆட்டை | ஆற்றை |
| 3 பாம்பால் | பூனையால் | கிளியால் | ஆட்டால் | ஆற்றால் |
| ,, பாம்போடு | பூனையோடு | கிளியோடு | ஆட்டோடு | ஆற்றோடு |
| 4 பாம்புக்கு | பூனைக்கு | கிளிக்கு | ஆட்டுக்கு | ஆற்றுக்கு |
| 5 பாம்பிலிருந்து | பூனையிலிருந்து | கிளியிலிருந்து | ஆட்டிலிருந்து | ஆற்றிலிருந்து |
| 6 பாம்பினுடைய | பூனையினுடைய | கிளியினுடைய | ஆட்டினுடைய | ஆற்றினுடைய |
| 7 பாம்பில் | பூனையில் | கிளியில் | ஆட்டில் | ஆற்றில் |
| 8 பாம்பே ! | பூனையே ! | கிளியே ! | ஆடே ! | ஆறே ! |

ஆக எட்டு வேற்றுமை உருபும் வந்தன காண்க.

பயிற்சி :—

1. உயர்திணையைச் சார்ந்த பால்கள் எவை? அவை ஒவ்வொன்றும் எந்தெந்த எண்களுக்குரியவை ?

2. அஃறிணையைச் சார்ந்த பால்கள் எவை ? அவை யொவ்வொன்றும் எந்தெந்த எண்களுக்குரியவை ?

3. கீழ்வரும் வாக்கியங்களில் குறிப்பிட்ட சொற்கள் எந்த இடத்தைச் சார்ந்தவை ?

என்னைப் பெற்ற என் **தாயை** என்றும் **நான்** மறவேனே. எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும். நீயே யாவரினும் பெரியோய். கல்விபோல் நல் மருந்தை யாம் காணேம். உயிர்கள் மீது இரக்கம் உடையவனை உலகம் போற்றும். நாங்கள் செய்வது நற் காரியம். நேற்றுக் காலை நீங்கள் வந்தீர்கள்.

4. கீழ் வரும் சொற்களில் உள்ள ஆண்பாலுக்குப் பெண்பாலும், பெண்பாலுக்கு ஆண்பாலும்தருக. அரசன் ; இடையன் ; வேடன் ; குறத்தி : வேலைக்காரி ; அழகி ; ஒருவன் ; பெரியவள்.

5. கீழ் உள்ள சொற்களில் உள்ள ஒருமையைப் பன்மையாகவும், பன்மையை ஒருமையாகவும் மாற்றுக. கலம், பசுக்கள், உடை, கதவு, ஈ, பூ, மக்கள், மகன், கணக்கன், பெண்டிர், நீர், வாயு, அணிகள், மன்னன், புதல்வர்கள்.

6. வேற்றுமை எத்தனை ? முதல் வேற்றுமைக்கு வேறு பெயர் யாது ? என் அப்பெயர் வந்தது ?

எட்டாம் வேற்றுமைக்கு வேறு பெயர் யாது ?

சாரியை யென்றால் யாது ? அது எங்கு வரும் ?

7. கீற்றிட்ட இடங்களில் ஏற்ற வேற்றுமை உருபுகளை அமைத்து எழுதுக.

வான்——பறவைகள் பறந்தன. அவன்——கண்——க் கட்டிக் காடு——விட்டனர். நாடு——சிறந்தது நாம்——தாய் நாடு. கொடுப்பார்——குறைவு இல்லை. மலை——விழும் அருவி. தாய்——முக——க் காணுதகுழந்தை.

8. பின் வரும் சொற்களில் சாரியையும் வேற்றுமை உருபையும் வேறு பிரித்துக் கூறுக.

காலத்தில், எவற்றை, கலத்தை, மானுக்கு, பல்லினால்.

9. பின் வரும் வார்த்தைகளில் முதல் வேற்றுமையைக் காட்டுக. எனக்கு, உங்களால், நம்மை, எம்மால், உமக்கு, எங்களில்.

10. அடியில் குறிப்பிடும் பெயர்ச் சொற்களுக்கு இலக்கணம் (அதாவது எண், திணை, பால், இடம், வேற்றுமை) கூறுக :—

சிறுவர்காள் ! காகம் கரைகின்றது ; பொழுது புலர்ந்தது. நீங்கள் விரைவில் படுக்கையை விட்டு எழுந்து வெளியே வாருங்கள் ; கிழக்குத்திசையில் உதிக்கின்ற சூரியனைப் பாருங்கள்.

# II. வினைச்சொல்

பொருள்களின் தொழிலை உணர்த்துஞ்சொல் வினைச் சொல்லாம்.



உழுகிறான்



உழுதான்



உழுவான்

உழுகிறான், உழுதான், உழுவான் என்னும் சொற்கள் உழவன் என்பவனது தொழிலை உணர்த்துவதால் அவை வினைச்சொற்கள். (வினை = தொழில்.)

## (1) காலம்.

1. உழவன் உழுகிறான்.
2. உழவன் உழுதான்.
3. உழவன் உழுவான்.

முதலாவது, உழுகிறான் என்னும் வினைச்சொல் தொழிலைத் தெரிவிப்பதோடு தொழில் நடக்கிற காலத்தையும் தெரிவிக்கிறது.

உழவன் எப்பொழுது உழுகிறான்?
உழவன் இப்பொழுது உழுகிறான்.

'இப்பொழுது' நடக்கிற காலத்தைக் குறிக்கிறது.

நடக்கிற தொழிலைத் தெரிவிப்பது நிகழ்காலம்.

"உழவன் உழுதான்" என்பதில், உழுதான் என்னும் வினைச்சொல் முன்பு நடந்துவிட்ட ஒரு தொழிலைத் தெரிவிக்கிறது.

உழவன் எப்பொழுது உழுதான்?
உழவன் நேற்று உழுதான்.

'நேற்று' சென்ற காலத்தைக் குறிக்கிறது.

முன்பு நடந்துவிட்ட தொழிலைத் தெரிவிப்பது இறந்த காலம்.

"உழவன் உழுவான்" என்பதில், உழுவான் என்னும் வினைச்சொல் இனிமேல் நடக்கும் தொழிலைத் தெரிவிக்கிறது.

உழவன் எப்பொழுது உழுவான்?
உழவன் நாளைக்கு உழுவான்.

'நாளை' வரும் காலத்தைக் குறிக்கிறது.

இனிமேல் நடக்கும் தொழிலைத் தெரிவிப்பது எதிர் காலம்.

எதிர்காலம் = வருங்காலம்.

## காலத்தைக் காட்டும் இடை நிலைகள்

### நிகழ் காலம்

வினைச்சொற்களின் இடையே நின்று காலத்தைக் காட்டுகின்ற எழுத்துக்கள் "இடை நிலை" எனப்படும்.



ஓ டு கி றா ன்

ஓடு + கிறு + ஆன் (கிறு)

ஓ டு கி ன் றா ன்

ஓடு + கின்று + ஆன் (கின்று)



எ ழு து கி றா ள்

எழுது + கிறு + ஆள் (கிறு)

எ ழு து கி ன் றா ள்

எழுது + கின்று + ஆள் (கின்று)

ஓடுகிறான், ஓடுகின்றான், எழுதுகிறாள், எழுதுகின்றாள் என்பவை போன்ற வினைச்சொற்கள் நிகழ்காலத்தை உணர்த்துகின்றன. அந்த வினைச்சொற்களைக் கவனித்துப் பார்ப்பீர்களானால், சில எழுத்துக்கள் இடையில் நின்று நிகழ் காலத்தைக் காட்டுகின்றனவென்று எளிதில் அறிந்து கொள்வீர்கள். அவ்வாறு இடையில் நிற்கின்ற எழுத்துக்கள் "கிறு," "கின்று" என்பனவாம்.

"கிறு," "கின்று" என்பன இரண்டும் நிகழ்கால இடை நிலைகள்.

## இறந்தகாலம்



உழுதான்

உழு+த்+ஆன்

(த்)

கமலம்  உண்டாள்

உண்+ட்+ஆள்

(ட்)

வேடன்  தின்முன்

தின்+ற்+ஆன்

(ற்)

தச்சன்  வெட்டினுன்

வெட்டு+இன்+ஆன்

(இன்)

"உழுதான்," "உண்டாள்," "தின்முன்," "வெட்டினுன்" என்பவை முன் நடந்து முடிந்த தொழில்களைத் தெரிவிக்கின்றன. அவை யாவும் இறந்தகால வினைச்சொற்களாம். அவற்றில் "த்," "ட்," "ற்," "இன்," என்பன வினைச்சொற்களின் இடையிலே நின்று இறந்தகாலத்தைக் காட்டுகின்றன.

ஆகையால் "த்," "ட்," "ற்," "இன்," என்பவை இறந்தகால இடை நிலைகளாம்.

எதிர்காலம்

உழவன்



உழுவான்

உழு+வ்+ஆன்

(வ்)

சீதை



உண்பாள்

உண்+ப்+ஆள்

(ப்)

"உழுவான்" "உண்பாள்" என்பவை இனிமேல் நடக்கும் தொழிலைத் தெரிவிக்கின்றன. ஆகையால் அவை எதிர்கால வினைச்சொற்களாம். அவற்றின் இடையிலே நின்று "வ்", "ப்" என்பவை எதிர்காலங்காட்டுகின்றன.

"வ்," "ப்" என்பவை எதிர்கால இடை நிலைகளாம்.

பயிற்சி :—

குறிப்பிட்ட வினைச் சொற்களின் இடைநிலைகளை எடுத்துக் காட்டி, இன்ன காலம் என்பதையும் புலப்படுத்துக. கிளி பறக்கின்றது. கழுகு தின்றது. கடிதம் எழுதினேன். ஆடினான்; பாடினான் கண்ணன். சிறுவன் தின் பண்டத்தை மென்று தின்றான்.

2. கீழ் வரும் வினைப்பகுதிகள் ஒவ்வொன்றையும் நிகழ்கால இறந்தகால எதிர்காலங்களில் அமைத்து எழுது.

செய், பெய், உண், படி, எண்ணு, கழுவு, ஓடு, தும்மு, சிரி, உடை, அடை, பார், சேர், இரு, நட.

## (2) பகுதி விகுதிகள்

ஒரு வினைச்சொல்லின் இடையில் இருப்பது இடைநிலையென்று படித்தீர்கள். அதுபோலவே ஒரு வினைச்சொல்லின் முதலிலிருப்பது "பகுதி" யென்றும், கடைசியிலிருப்பது "விகுதி" யென்றும் சொல்லப்படும்.

ஓடுகிறான் என்ற வினைச்சொல்லை

ஓடு + கிறு + ஆன். என மூன்றாகப் பிரிக்கலாம். இவற்றில் முதலில் இருப்பது "ஓடு" என்பது; அது பகுதி.

கிறு—என்பது—இடைநிலை.

ஆன்—என்பது—விகுதி.

இவற்றுள் பகுதி "ஓடு" என்பது. அதனால் நாம் இன்னதொழில் நடக்கிறது என்பதை யறியலாம்.

இடைநிலை "கிறு" என்பது. அதனால் காலத்தை யறிகிறோம்.

விகுதி "ஆன்" என்பது. அதனால் பால் முதலியவற்றை யறியலாம்.

## (3) வினை முற்று

இராமன் வந்தான்.

இந்த வாக்கியத்தில் வந்தான் என்பது, பால் இடம் முதலியவற்றைக் காட்டி முடிவடைகின்றமையால், அது வினைமுற்றெனப்படும், (முற்றுதல்—முடிதல் . நிரம்புதல்.)

முடிந்த வினைச்சொற்கள் வினைமுற்றுக்களாம்.

அவை,

I. தன்மை வினைமுற்று
II. முன்னிலை வினைமுற்று
III. படர்க்கை வினைமுற்று
IV. ஏவல் வினைமுற்று
V. வியங்கோள் வினைமுற்று

என ஐந்துவகைப்படும்

## I. தன்மை வினைமுற்று

தன்மை வினைமுற்று இரண்டு வகைப்படும் :—

(1) தன்மை ஒருமை வினைமுற்று—விகுதி—என்
(உ - ம்) செய்தேன் (செய்+த்+என்)

(2) தன்மைப் பன்மை வினைமுற்று—விகுதி—ஓம்
(உ - ம்) செய்தோம் (செய்+த்+ஓம்)

## II. முன்னிலை வினைமுற்று

முன்னிலை வினைமுற்று இரண்டு வகைப்படும் .—

(1) முன்னிலை ஒருமை வினைமுற்று—விகுதி—ஆய்
(உ - ம்) செய்தாய் (செய்+த்+ஆய்)

(2) முன்னிலைப் பன்மை வினைமுற்று—விகுதி—ஈர், ஈர்கள்
(உ - ம்) செய்தீர் (செய் + த் + ஈர்)
செய்தீர்கள் (செய்+த்+ஈர்கள்)

## III. படர்க்கை வினைமுற்று

படர்க்கை வினைமுற்று ஐந்து வகைப்படும் :—

(1) ஆண்பால் படர்க்கை வினைமுற்று—விகுதி—ஆன்
(உ - ம்) செய்தான் (செய்+த்+ஆன்)

(2) பெண்பால் படர்க்கை வினைமுற்று—விகுதி—ஆள்
(உ - ம்) செய்தாள் (செய்+த்+ஆள்)

(3) பலர்பாற் படர்க்கை வினைமுற்று—விகுதி—ஆர்
(உ - ம்) செய்தார் (செய்+த்+ஆர்)

(4) ஒன்றன்பாற் படர்க்கை வினைமுற்று—விகுதி—து
(உ - ம்) செய்தது (செய்+த்+(அ)+து)

(5) பலவின்பாற் படர்க்கை வினைமுற்று—விகுதி—அ
(உ - ம்) செய்தன (செய்+த்+(அன்)+அ)

## IV. ஏவல் வினைமுற்று

"இதைச் செய்" என்று ஒருவருக்கு வேலையிடுவது ஏவல் வினைமுற்றும். "தம்பி! நீ இதைப்பார்த்து எழுது வாய்" என்ற வாக்கியத்தில் "எழுதுவாய்" என்பது "எழுது" என வேலையிடுவதால் ஏவல் வினைமுற்றும்.

அது இரண்டு வகைப்படும் :—

(1) ஏவல் ஒருமை வினைமுற்று—விகுதி—ஆய்
(உ-ம்) எழுதுவாய் (எழுது + வ் + ஆய்)

(2) ஏவல் பன்மை வினைமுற்று—விகுதி—உம்கள்
(உ-ம்) படியுங்கள் (படி + உம்கள்)

## V. வியங்கோள் வினைமுற்று

ஒருவருக்கு மரியாதையாய் வேலையிடுவது வியங்கோள் வினைமுற்றும்.

வியங்கோள் வினை முற்றின் விகுதி "க" என்பதாம்.

அது இரண்டு வகைப்படும் :—

ஒருமை—நீ இதைப்படித்து எழுதுக.
பன்மை—நீங்கள் எங்கள் வீட்டிற்கு வருக.

இவ்வாக்கியங்களில், "எழுதுக", "வருக" என்பன வியங்கோள் வினைமுற்று.

### பெயர்ச்சொல்லும், வினைச்சொல்லும்

பெயர்ச் சொல்லும், வினைச்சொல்லும் பொதுவாகத் திணை, பால், இடம், எண் இவற்றைக் காட்டும். ஆனால், பெயர்ச்சொல் வேற்றுமை ஏற்கும்; காலம் காட்டாது.

வினைச்சொல் காலங்காட்டும்; வேற்றுமையை ஏற்காது.

## (4) எச்சம்

முடிந்த அல்லது நிரம்பிய வினைச்சொல் வினைமுற்று என்று முன் படித்தீர்கள். நிரம்பாத வினைச் சொற்களும் உண்டு. நிரம்பாத வினைச்சொல் "எச்சம்" என்னப்படும். (எச்சம் - குறைவு)

உழுதான் என்ற வினைச்சொல் பாலையும் இடத்தையும் காட்டும் உறுப்பை உடையதாகி நிரம்பிய வினைச்சொல் ஆகிறது.

உழுத, உழுது என்று வருவன, பாலையும் இடத்தையும் காட்டும் உறுப்புப் பெருமையால் நிரம்பவில்லை.

இவை "எச்சம்" ஆம்.
நிரம்பாத வினைச்சொல் எச்சம் ஆகும்.

"உழுத", "உழுது" என்பன எச்சங்களே எனினும் இவற்றின் வேறுபாட்டைக் கவனியுங்கள்.

### பெயரெச்சம்

இவற்றுள் உழுத என்பது,—

உழுத — உழவன்
— நிலம்
— கலப்பை
— மாடு

எனப் பெயர்ச்சொற்களைக் கொண்டு முடிகிறது. ஆதலால் அது பெயரெச்சம் எனப்படும். பெயர்ச் சொல்லைக் கொண்டு முடியும் எச்சம் பெயரெச்சமாம்.

பெயரெச்சம் மூன்று வகைப்படும்.

(1) இறந்தகாலப் பெயரெச்சம்.
(உ - ம்) உழுத (உழு + த் + அ)—நிலம்.

(2) நிகழ்காலப் பெயரெச்சம்.
(உ - ம்) உழுகின்ற (உழு + கின்று + அ)—நிலம்.

(3) எதிர்காலப் பெயரெச்சம்.
(உ - ம்) உழும் (உழு + உம்)—நிலம்.

இவற்றுள் 'உழுத', 'உழுகின்ற' என்னும் இரண்டு எச்சங்களும் தம் தம் இடைநிலைகளால் காலம் காட்டின; 'உழும்' என்னும் எதிர்காலப் பெயரெச்சம் விகுதியால் காலம் காட்டிற்று.

இறந்தகாலப் பெயரெச்சமும், நிகழ்காலப் பெயரெச்சமும் இடை நிலையால் காலம் காட்டும்; எதிர்காலப் பெயரெச்சம் விகுதியாற் காலம் காட்டும்.

## வினையெச்சம்

"உழுது" என்பது,—
உழுது —விதைத்தான்
—வந்தான்.

என வினைச்சொற்களைக் கொண்டு முடிகிறது. ஆதலால் அது வினையெச்சம் என்னப்படும்.

வினைச்சொற்களைக் கொண்டு முடியும் எச்சம் வினையெச்சமாம்.

வினையெச்சம் மூன்றுவகைப்படும்.

(1) இறந்தகால வினையெச்சம்
(உ - ம்) உழுது (உழு + த் + உ).

(2) நிகழ்கால வினையெச்சம்
(உ - ம்) உழ (உழு + அ)

(3) எதிர்கால வினையெச்சம்
(உ - ம்) உழுதால் (உழு + (த்) + ஆல்)

இறந்தகால வினையெச்சம் இங்கு இடைநிலையாற் காலங் காட்டிற்று. நிகழ்கால வினையெச்சமும், எதிர்கால வினையெச்சமும் விகுதிகளாற் காலங் காட்டின.

## (5) விகுதி

ஒரு சொல்லின் கடைசியில் இருப்பது 'விகுதி என்று படித்தீர்கள். அவற்றை யொன்று சேரத் தொகுத்' துக் கூறுவதானுல் பின்வருமாறு கூறலாம் :—

1. தன்மை ஒருமை விகுதி
2. தன்மைப் பன்மை ,,
3. முன்னிலை ஒருமை ,,
4. முன்னிலைப் பன்மை,,
5. உயர்திணை ஆண்பால்,,
6. உயர்திணைப் பெண் பால் ,,
7. உயர் திணைப் பலர்பால் ,,
8. அஃறிணைஒன்றன்பால்விகுதி
9. அஃறிணைப் பலவின்பால் ,,
10. ஏவல் ஒருமை ,,
11. ஏவல் பன்மை ,,
12. வியங்கோள் ஒருமை ,,
13. வியங்கோள் பன்மை ,,
14. பெயரெச்ச ,,
15. வினையெச்ச ,,

(1) தன்மை ஒருமை விகுதி—ஏன்

நான்
யான் } செய்தேன்

(2) தன்மைப் பன்மை விகுதி—ஓம்

நாம்
யாம்
நாங்கள்
யாங்கள் } செய்தோம்

(3) முன்னிலை ஒருமை விகுதி ஆய்—நீ செய்கிறய்

(4) முன்னிலைப் பன்மை விகுதி—

ஈர் } நீர் } செய்தீர்
ஈர்கள் } நீங்கள் } செய்தீர்கள்

படர்க்கை — உயர்திணை

(5) ஆண்பால்! விகுதி—ஆன் அவன் செய்வான்

(6) பெண்பால் விகுதி—ஆள் அவள் செய்வாள்

(7) பலர்பால் விகுதி—

ஆர் } அவர் செய்வார்
ஆர்கள் } அவர்கள் செய்வார்கள்

அஃறிணை

(8) ஒன்றன்பால் விகுதி—து அது செய்கின்றது

(9) பலவின்பால் விகுதி—அ அவை செய்கின்றன

(10) ஏவல் ஒருமை விகுதி—ஆய் தம்பீ! நிற்பாய்

(11) ஏவல் பன்மை விகுதி—உம் - கள்
பிள்ளைகாள்! நில்லுங்கள்

(12) வியங்கோள் ஒருமை விகுதி—க நீ எழுதுக
,, பன்மை விகுதி—க நீங்கள் எழுதுக

(13) இறந்தகாலப் பெயரெச்ச விகுதி—அ செய்த
நிகழ்காலப் பெயரெச்ச விகுதி—அ செய்கிற
எதிர்காலப் பெயரெச்ச விகுதி—உம் செய்யும்

(14) இறந்தகால வினையெச்ச விகுதி—உ செய்து
நிகழ்கால வினையெச்ச விகுதி—அ செய்ய
எதிர்கால வினையெச்ச விகுதி—ஆல் செய்தால்

பயிற்சி :—

(1) பின்வரும் வாக்கியங்களில் குறிப்பிட்ட சொற்கள் இன்ன வினைமுற்றென்று விகுதியினால் காட்டுக.

நடக்கிறான், வருவேன், வருக, படியுங்கள், போவோம், சொல்வாள், பேசினாய், சென்றார், பாடினீர்கள், பறக்கிறது, கூவுகின்றன.

(2) பின்வரும் எச்சங்களில் பெயரெச்சங்களையும், வினையெச்சங்களையும் பிரித்துக் காட்டி, அவ்வாறு பிரித்ததற்குக் காரணமும் கூறுக.

தேடின, படிக்க, பார்த்து, கேட்கிற, வந்தால், கொடுத்து, தொடரும், எடுத்த.

## (6) உடன்பாடு, எதிர்மறை

வினைச் சொல்லில் உடன்பாடும், எதிர்மறையும் இவை என அறிதல் வேண்டும்.

செய்வேன்—உடன்பாடு.

செய்யேன்—எதிர்மறை.

### படர்க்கை வினைமுற்று

| | | | |
|---|---|---|---|
| ஆண்பால் | படித்தான் | × | படியான் |
| பெண்பால் | எழுதினள் | × | எழுதாள் |
| பலர்பால் | நின்றார் | × | நில்லார் |
| ஒன்றன்பால் | ஓடிற்று | × | ஓடாது |
| பலவின்பால் | பாடின | × | பாடா |

### தன்மை வினைமுற்று

| | | | |
|---|---|---|---|
| ஒருமை | நடந்தேன் | × | நடவேன் |
| பன்மை | பிடிப்போம் | × | பிடியோம் |

### முன்னிலை வினைமுற்று

| | | | |
|---|---|---|---|
| ஒருமை— | நிற்பாய் | × | நில்லாய் |
| பன்மை— | அறிந்தீர் | × | அறியீர் |

### ஏவல் வினைமுற்று

| | | | |
|---|---|---|---|
| ஒருமை — | விளையாடுவாய் | × | விளையாடேல் |
| பன்மை — | கேளுங்கள் | × | கேளாதேயுங்கள் |

### வியங்கோள் வினைமுற்று

| | | | |
|---|---|---|---|
| ஒருமை — | கொள்க | × | கொள்ளற்க |
| பன்மை — | தேடுக | × | தேடற்க |

பெயரெச்சம்

ஓடின X ஓடாத

வினை யெச்சம்

முடித்து X முடியாமல்

என உடன்பாடும், எதிர்மறையும், வினைமுற்றுக்களிலும், எச்சங்களிலும் வந்தமை காண்க.

பயிற்சி :—

(1) பின்வரும் வினைமுற்றுக்களில் உடன்பாட்டுக்கு எதிர்மறையும், எதிர்மறைக்கு உடன்பாடும் எழுதுக.

இராமன் வில்லை ஒடித்தான். வேடுவர் கொல்லாமையை அறியார். வள்ளி பறவைகளை ஓட்டினாள். வேலன் நம்மை முகம் பாரான். நளன் பிரிந்ததைத் தமயந்தி அறியாள். நீ தெளியாது படியற்க. நீ செய்வனத் திருந்தச் செய். நீ சூது விரும்பேல். ஒருவரையும் பொல்லாங்கு சொல்லாதே யுங்கள். இரவியின் முன் இருட் கூட்டங்கள் நில்லா. இல்லை யென்ற இடத்தில் பல்லியும் சேராது. நாம் நமனை அஞ்சோம்.

(2) பின்வரும் எச்சங்களில் உடன் பாட்டுக்கு எதிர்மறையும்' எதிர்மறைக்கு உடன்பாடும் எழுதுக.

வடித்தகஞ்சி குடித்து வளர்ந்தார். கடவுளைக் காணாத கண் புறக் கண். ஓடி விளைத்த சேனையை ஓரம்பால் வென்றான். கல்வி கற்பிக்கிற குருவை மறவாதே. கோய்யாமல், துவியாமல், மணம் வீசும் மலர். குறையாத செல்வம் கல்வியே.

(3) பின்வரும் வினைமுற்றுக்களுக்குத் திணை, பால், இடம், காலம் கூறுக.

வருகிறாள், முடித்தான், விடுவேன், வைப்பார்கள், தெரிவீர்கள், கொள்வோம், ஓடின, செய்தேன்.

[குறிப்பு :—தன்மை, முன்னிலை யிடங்களுக்குத் திணையும் பாலும் இல்லை.]

## III. இடைச் சொல்

"முருகனும், நானும் போனோம்" என்னும் வாக்கியத்தில் என்னென்ன சொற்கள் உள்ளன? 'முருகன்,' நான், என்பவை பெயர்ச்சொற்கள்; 'போனோம்' என்பது வினைச்சொல்.

'முருகன் + உம்,' நான் + உம்' என்று வந்த "உம்" என்பது என்ன சொல்? பெயர்ச் சொல்லாயிருந்தால் ஒரு பொருளின் பெயரைக் குறிக்க வேண்டும். வினைச் சொல்லாயிருந்தால் தொழிலைக் குறிக்கவேண்டும். அது இவ்விரண்டு சொல்லும் அன்று. அது "இடைச் சொல்" எனப்படும். இங்குப் பெயர்ச் சொல்லை 'அடுத்து வந்திருக்கிறது.

அவன் "படிக்கவும், எழுதவும் அறிந்தான்" என்னும் வாக்கியத்தில், "உம்" என்ற இடைச்சொல் 'படிக்க,' 'எழுத' என்ற வினைச் சொல்லை அடுத்து வந்திருக்கிறது.

தனித்து வாராமல் பெயர்ச் சொல்லையும், வினைச் சொல்லையும் அடுத்து வரும் சொல்-இடைச்சொல்லாம்.

"ஓ! வந்து விட்டானே"

இங்கு முதலில் உள்ள "ஓ" என்பதும், கடைசியில் உள்ள "ஏ" என்பதும் இடைச்சொற்களாம்.

நாம் பளுவான மூட்டை யொன்றை அசைத்துப் பார்த்து, அது நம்மால் அசைக்க முடியாத பொழுது "அம்மா! எவ்வளவு பளு" என்போம். ஓர் யானையைப் பார்க்கும்பொழுது "அப்பா! எவ்வளவு பெரிய யானை" என்போம். இங்கே நாம 'அம்மா!', 'அப்பா!' என்று நம் தாய் தந்தையரைக் கூப்பிட்டோமா? இல்லை. ஆச்சரியத்தால் அவ்வாறு சொன்னோம். இவைகளும் இடைச் சொல்லாம். இவை வியப்பிடைச்சோல் என்னப்படும் (வியப்பு = ஆச்சரியம்)

## IV. உரிச் சொல்

இடைச் சொல்லைப் போலவே, பெயர் வினைகளை அடுத்து " நனி பேதை, " "சால நன்று" எனவரும் வேறு சொல்லும் உண்டு. அது " உரிச்சொல் " எனப்படும்.

" நனி "

" சால "

என்பன உரிச்சொல். இவை பெயர் வினைகளின் குணத்தை உணர்த்தி வரும்.

சால, நனி—என்பன மிகுதி யென்று பொருள் தரும்.

பெயர்ச்சொல், வினைச் சொற்களை யடுத்து அவற்றின் குணத்தை உணர்த்திவரும் சொல் உரிச் சொல்லாம்.

உரிச் சொல் பாடல்களில் வரும்.

## V. சந்தி

நாம் ஒருவர் ஒருவரைக் காண்பதைச் " சந்தித்தல் " என்கிறோம். தெருக்கள் ஒன்றோடொன்று சேருமிடத்தைச் " சந்தி " என்கிறோம். அதுபோலவே ஒரு சொல்லோடு பிறிதொரு சொல் சேர்வதும் " சந்தி " எனப்படுகிறது.

அவ்வாறு சேரும் இரு சொற்களில் முதலில் நிற்கும் சொல்லுக்கு " நிலைமொழி " என்றும், அதைச் சேரவரும் சொல்லுக்கு " வரும் மொழி " அல்லது " வருமொழி" என்றும் பெயர்.

மண் பானை.

இங்கு " மண் " என்பது நிலைமொழி ; " பானை " யென்பது வருமொழி.

## புணர்ச்சி

நிலைமொழியின் ஈறும், வருமொழியின் முதலும் ஒன்றுபடச் சேர்வது "புணர்ச்சி" என்னப்படும். (ஈறு—கடைசி)

**நிலை மொழி யீறும், வருமொழி முதலும் ஒன்றுபடச் சேர்வது புணர்ச்சியாம்.**

"வாழை" என்ற நிலைமொழியோடு "மரம்" என்ற வருமொழியைக் கூட்டிச் சொல்லிப் பார். எப்படி ஆகிறது?

வாழை + மரம் = வாழைமரம்

என முன்னிருந்தபடியே ஆகிறது.

இனி "வாழை" என்ற நிலைமொழியோடு "பழம்" என்ற வேறொரு வருமொழியைக் கூட்டிச் சொல்லிப் பார். வாழை + பழம் = வாழைப்பழம் என்றாகிறது. நிலைமொழிக்கும் வருமொழிக்கும் இடையில் "ப்" என்ற ஓர் எழுத்து மிகுந்திருக்கிறது.

இவ்விரண்டில், வாழை + மரம் = வாழைமரம் எனச் சேர்வது "இயற்கைப் புணர்ச்சி" யென்னப்படும்.

வாழை + பழம் = வாழைப்பழம்

எனச் சேர்வது "விகாரப் புணர்ச்சி" என்னப்படும்.

### இயல்புப் புணர்ச்சி

**நிலைமொழியீறும், வருமொழி முதலும் சேரும்போது யாதோரு விகாரமுமில்லாமல் இருப்பது இயல்புப் புணர்ச்சியாம்.**

(உ-ம்) மான் + கொம்பு = மான்கொம்பு
கல் + வாழை = கல்வாழை
தேர் + வடம் = தேர்வடம்

என இயல்பாயின.

(உ - ம்) பால் + ஆறு = ல் + ஆ = லா = பாலாறு
வேல் + ஆயுதம் = ல் + ஆ = லா = வேலாயுதம்
நீர் + ஓடை = ர் + ஓ = ரோ = நீரோடை

என மெய்யெழுத்தின் மேல் உயிர் எழுத்து ஏறி வருவதும் இயல்புப் புணர்ச்சியே.

## விகாரப் புணர்ச்சி

நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் சேரும்போது இயல்பாயிராமல் ஏதேனும் விகாரம் அடைந்தால் அது விகாரப் புணர்ச்சியாம்.

## தோன்றல் விகாரம்

(உ - ம்) பூ + தோட்டம்
பூ + ங் + தோட்டம் = பூங்தோட்டம்

இங்கு நிலைமொழியும் வருமொழியும் சேரும்போது இடையில் ஓர் எழுத்துத் தோன்றியிருப்பதால் இது "தோன்றல் விகாரம்" எனப்படும்.

இவ்வாறே, தாமரை + குளம் = தாமரை + க் + குளம்.
= தாமரைக்குளம்.

மல்லிகை + பூ = மல்லிகை + ப் + பூ = மல்லிகைப்பூ.

தயிர் + குடம் = தயிர் + க் + குடம் = தயிர்க்குடம்.

என வருவன வெல்லாம் தோன்றல் விகாரங்களாம்.

## கெடுதல் விகாரம்

கானம் + மயில் = கான + மயில் = கானமயில்

இங்கு நிலை மொழியும் வருமொழியும் சேரும்போது ஓர் எழுத்துக் கெட்டு விட்டதால் இது "கெடுதல் விகாரம்" என்னப்படும்.

இவ்வாறே, நீலம் + மேகம் = நீல + மேகம் = நீலமேகம்

பவளம் + மலை = பவள + மலை = பவளமலை

மேகம் + மண்டலம் = மேக + மண்டலம் = மேகமண்டலம்

எனவருவன வெல்லாம் கெடுதல் விகாரங்களாம்.

## திரிதல் விகாரம்

மண் + பானை = மட்பானை

இங்கு நிலைமொழியும் வருமொழியும் சேரும்போது ஓர் எழுத்துத் தோன்றவுமில்லை ; ஓர் எழுத்துக்கெடவுமில்லை ; ஓர் எழுத்து மற்றோரெழுத்தாய்த் திரிகிறது. அதனால் இது திரிதல் விகாரமாம்.

(திரிதல் = மாறுபடுதல்)

இவ்வாறே, வைக்கோல் + போர் = வைக்கோற் போர்

மஞ்சள் + கயிறு = மஞ்சட் கயிறு

மனம் + தடுமாறேல் = மனந்தடுமாறேல்

என வருவனவெல்லாம் திரிதல் விகாரங்களாம்.

**பயிற்சி :—**

(1) புணர்ச்சியாவது யாது? இயல்புப் புணர்ச்சிக்கும் வேற்றுமைப் புணர்ச்சிக்கும் வேறுபாடு யாது?

இவ்விரண்டினுக்கும் ஒவ்வோர் உதாரணம் தருக.

(2) பின்வரும் மொழிகளைப் புணர்த்தி எழுதுக.

பொன் + மலை ; காலை + வேளை ; மேல் + ஆடை ;
கோல் + ஆட்டம் ; நேரம் + ஆயிற்று ; சோம்பல் + ஆகாது

(3) பின்வரும் மொழிகளைப் பிரித்து எழுதுக. பேரேடு, வட்டமிடு, எரெழுபது, காலொடிந்தது.

(4) பின்வரும் மொழிகளைப் பிரித்து ஒவ்வொன்றும், மூவகை விகாரங்களுள் இன்ன விகாரம் என்றெழுதுக,

வேலைக்காரன், நெடுநேரம், பணங்கொடுத்தான், மனவாட்டம் வாழைக்குலை, மாந்தோப்பு, கற்சட்டி.

## VI. வாக்கியம்

முருகன் பாடம் படிப்பான்.
அக்காள் கோலம் போடுகிருள்.
அண்ணன் கடிதம் எழுதினுன்.

என்னும் இவைகள் வாக்கியம் என்னப்படும்.

எழுவாய் பயனிலை கூடியது ஒரு வாக்கியமாம்.

### எழுவாய்

ஒரு காரியத்தைச் செய்பவன் எழுவாய் ஆம்.

[எழுவாய் - கர்த்தா எனவும் சொல்லப்படும்]

'முருகன் பாடம் படிப்பான்' என்ற வாக்கியத்தில் படித்தலாகிய காரியத்தைச் செய்பவன் யார்? "முருகன்." ஆதலால் "முருகன்" எழுவாய். இவ்வாறே 'அக்காள் கோலம் போடுகிருள்' என்ற வாக்கியத்தில் கோலம் போடுதலாகிய காரியத்தைச் செய்பவர் யார்? "அக்காள்." ஆதலால் இங்கு "அக்காள்" எழுவாய் ஆம். 'அண்ணன் கடிதம் எழுதினுன்' என்ற வாக்கியத்தில் கடிதம் எழுதலாகிய காரியத்தைச் செய்பவர் யார்? "அண்ணன்." ஆதலால் இங்கு "அண்ணன்" எழுவாய். ஒவ்வொரு வாக்கியத்திலும் வரும் வினைச்சொல்லைக் கொண்டு யார்? எது? எவை? எனக் கேள்வி கேட்டால் வரும் விடை எதுவோ, அதுவே எழுவாய் எனச் சுலபமாகக் கூறிவிடலாம்.

| | |
|---|---|
| குயில்கள் கூவின | மயில் ஆடிற்று |
| மனிதர் வாழ்த்தினர் | நான் கண்டேன் |
| நீங்கள் கேட்டீர்கள் | அரசன் ஆளுகிருன் |

என்னும் இவ்வாக்கியங்களில் முன் காட்டியவாறு கேள்வி கேட்டு, வரும் விடையினுல் எழுவாயைக் கூறுவீர்களாக.

### பயனிலை

ஒரு வாக்கியத்தில் எழுவாய் செய்த காரியம் எதுவோ அதுவே பயனிலையாம்.

வேலன் விளையாடினான்.

இங்கு வேலன் என்ன செய்தான்? என்று வினவினால் "விளையாடினான்" என்று விடை வரும்: ஆகையால் "விளையாடினான்" என்பது பயனிலை.

தாய் என்னை வளர்த்தாள்.
உபாத்தியாயர் பாடத்தைக் கற்பிக்கிறார்.
கடவுள் நம்மைக் காப்பாற்றுவார்.

இவ்வாக்கியங்களிலும் அவ்வாறே கேள்வி கேட்டுப் பயனிலையை அறியவேண்டும்.

### செயப்படு பொருள்.

ரு வாக்கியத்தில் எழுவாயால் செய்யப்பட்ட பொருள் அது செயப்படு பொருளாம். தச்சன் நாற்காலி சய்தான் என்ற வாக்கியத்தில் தச்சனால் செய்யப் பொருள் எது? "நாற்காலி" ஆகையால் இங்கு காலி" செயப்படுபொருள்

முனியன் வீட்டைக் கட்டினான்.
இராமன் வில்லை வளைத்தான்.
சீதை இராமனை மணந்தாள்.

இவற்றில் செயப்படு பொருளை எப்படியறியலாம்? பயனிலையைக் கொண்டு, யாரை? அல்லது எதை? எவற்றை? என்று கேள்விகேட்டால் வரும் விடை செயப்படு பொருள் என்று அறியலாம்.

செயப்படு பொருள் இரண்டாம் வேற்றுமையாகவே இருப்பதைக் கவனி.

TB P31(b)

| செயப்படு பொருள் **குன்றிய வினை** | செயப்படு பொருள் **குன்றாத வினை** |
|---|---|
| ஓடுகிறான் | உழுகிறான் |

இங்கு " ஓடுகிறான் " " உழுகிறான் " என்ற இரண்டு சொற்களும் வினைச் சொற்களே. என்றாலும் இவற்றின் வேறுபாடு உனக்குத் தெரிகிறதா ? இந்த வினைச் சொற்களைக் கொண்டு யாரை ? எதை ? என்று கேள்வி கேட்டால் விடை வருகிறதா ? பார்.

முதல் வினைச்சொல் " ஓடுகிறான்" என்பது. அதைக் கொண்டு, " எதை ஓடுகிறான் ?" அல்லது " யாரை ஓடுகிறான் ?" என்றால் விடை வரவில்லை.

அடுத்த " உழுகிறான் " என்ற சொல்லைக் கொண்டு அக்கேள்வி கேட்டுப்பார். " எதை உழுதான் "? என்றால் " நிலத்தை உழுதான் " என்ற விடை வருகிறது. ஆகையால் " ஓடுகிறான் " என்ற வினையில் செ[illegible] பொருள் இல்லை. அது "செயப்படு பொருள் குன்றி[illegible] யாம்.

" உழுகிறான் " என்ற வினையில் " நிலம் [illegible] செயப்படு பொருள் இருக்கிறது. ஆகையா[illegible] " செயப்படு பொருள் குன்றாத வினை "யாம்.

**பயிற்சி :—**

86394

(1) வாக்கியமாவது யாது ?

எழுவாய்—யாவது ? ஒரு வாக்கியத்தில் எழுவாயை அறிவதெப்படி ? பயனிலை—யாவது ? செயப்படு பொருள் யாவது ? பயனிலையை யெப்படி யறியலாம் ? செயப்படு பொருளை எப்படி யறியலாம் ?

வருவான், அனுப்பினான், நின்றான், நடந்தான், கொடுத்தான், தடுத்தான், ஆடினான், தேடினான்.

(2) இவற்றில் செயப்படுபொருள் குன்றிய வினை, குன்றா வினைகளைக் காட்டுக.

PRINTED AT THE ROYAL PRINTING WORKS, MOUNT ROAD, MADRAS.

224